**தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதி மாவட்டச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) - கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும்/ அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமை | 2.3.1 |
| | | 2. புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை நாளதுவரையாக்கப்பட்டு இருக்காமை | 2.9 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | இணங்காமகள் | 2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது | சொத்துக்கள் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்துரைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை | முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆகக்குறைந்தது காலாண்டுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்குத் தவறியமை | 2.7 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

---

(அ) பிரசைகள் உரிமைச் சாசனத்தினை மாவட்ட ரீதியாகவும் பிரதேச செயலக ரீதியாகவும் மிகவும் நல்ல முறையில் செயற்படுத்துதல்

(ஆ) மாவட்ட நிர்வாகத்தினையும் அபிவிருத்தியையும் ஒருங்கிணைப்பதில் முன்நிற்றல்

(இ) அரசாங்கத்தின் கொள்கைகளையும் நிர்வாக அமைப்புக்களையும் நன்றாக நடைமுறைப்படுத்தி அரச சேவையின் உற்பத்தித்திறனை மாவட்ட மட்டத்தில் மேம்படுத்துதல்

(ஈ) புரிந்துணர்வுடன் கூடிய பக்கச்சார்பற்ற, வகை சொல்லுடைய அரச சேவையினை வழங்குதல்

(உ) சேவையாளர்களின் சேவைத்திறனை மேம்படுத்துதல்

(ஊ) மாவட்ட செயலகத்தினதும் பிரதேச செயலகங்களினதும் நிதி நிர்வாகத்தினை முன்னேற்றுதல்

(எ) மாவட்டச் செயலகத்தினதும், பிரதேச செயலகங்களினதும் பொது நிர்வாக முறைமைகளை மேம்படுத்துதல்

(ஏ) மாவட்டத்திலுள்ள மக்களின் தேவைகளை அவர்கள் திருப்தியடையும் வண்ணம் நிறைவேற்றுவதற்கான சேவையினை வழங்குதல்

(ஐ) புதிய தொழில்நுட்பத்தினை எல்லாவித சேவைகளிலும் அறிமுகப்படுத்தி, அரச சேவையின் உற்பத்தித்திறனை அதிகரித்தலும் தரம்மிக்க சேவையினை வழங்குதல்

(ஒ) முக்கியமான நிதிக்குறியீடுகளை அளவிடுதல்

(ஓ) அமைச்சர்களினால் பகிர்ந்து தரப்பட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்

(ஔ) அரசாங்க வைபவங்களை மாவட்ட ரீதியிலும் பிரதேச ரீதியிலும் நடாத்துதல்

(க) வெளிநாட்டு உதவியுடன் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்குபடுத்துதலும், மேற்பார்வை செய்தலும், மீளாய்வு செய்தலும்

(கா) பேரழிவுகள் பேராபத்துக்கள் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புக்களை எதிர்கொள்ளவும் பாதுகாப்புக்களை தவிர்பதற்குமான வழிவகைகளை முன்கூட்டியே திட்டமிடுதல்

(கி) வளங்களை உச்சளவில் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளை முறைப்படுத்துதல்.

**2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள்**

---

மாவட்ட செயலகத்தின் அதிகார எல்லையின் கீழுள்ள பிரதேச செயலகங்களால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | பிரதேச செயலகங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| (i) | கரைத்துறைப்பற்று பிரதேச செயலகம் | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களை தோற்றுவிக்கும் அதிகாரச்சட்டம். | மத்திய அரசாங்கத்தாலும் மாகாண சபைகளாலும் ஒப்படைக்கப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் பிரதேச செயலகங்களால் அமுல்படுத்தப்படுகின்றன. |
| (ii) | புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் | | |
| (iii) | ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் | | |
| (iv) | துணுக்காய் பிரதேச செயலகம் | | |
| (v) | மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் | | |
| (vi) | வெலிஓய பிரதேச செயலகம் | | |

## 2.3 செயலாற்றல்

### 2.3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை மாவட்ட செயலகம் தயாரித்திருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.4.1 வாகனங்களின் பயன்படுத்துகை

2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டொன்றில் ஆகக்குறைந்தது ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டியபோதிலும் மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களிற்குரிய 19 வாகனங்கள் தொடர்பான எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டிற்கான மாவட்டச் செயலகத்தின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட மாவட்டச் செயலகத்தின் அலுவலகக் கட்டட நிர்மாணத்திற்கான உடன்படிக்கை, கேள்வி ஆவணங்கள், கணிய அளவைகள் சிட்டை மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் என்பன சமர்ப்பிக்கப்படாமை போன்ற குறைபாடு இன்றுவரை நிவர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை

## 2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியின் போது மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவற்றின் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 137.007 | 125.939 | 11.068 | 8.08 |
| | மூலதனம் | 118.795 | 117.418 | 1.377 | 1.16 |
| | **மொத்தம்** | **255.802** | **243.357** | **12.445** | **4.86** |
| 2014 | மீண்டுவருபவை | 144.725 | 136.521 | 8.204 | 5.67 |
| | மூலதனம் | 70.050 | 69.782 | 0.268 | 0.38 |
| | **மொத்தம்** | **214.775** | **206.303** | **8.472** | **3.94** |
| 2015 | மீண்டுவருபவை | 188.626 | 177.970 | 10.656 | 5.65 |
| | மூலதனம் | 73.474 | 73.418 | 0.056 | 0.03 |
| | **மொத்தம்** | **262.100** | **251.388** | **10.712** | **4.09** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2016 | மீண்டுவருபவை | 180.633 | 177.070 | 3.563 | 1.97 |
| | மூலதனம் | 91.000 | 90.954 | 0.046 | 0.05 |
| | **மொத்தம்** | **271.633** | **268.024** | **3.609** | **1.33** |
| 2017 | மீண்டுவருபவை | 187.440 | 180.644 | 6.796 | 3.62 |
| | மூலதனம் | 120.000 | 119.353 | 0.647 | 0.54 |
| | **மொத்தம்** | **307.440** | **299.997** | **7.443** | **2.42** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரிச் செயலாளரால் வழங்கப்பட்ட 2011 செப்தெம்பர் 27 ஆம் திகதிய பிஎவ்டி/பிஎம்டி/சிஎல்ஏஆர்ஜ/11/02 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சனசமூக அபிவிருத்தி நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற சமுதாய அடிப்படை நிறுவனங்களிற்கு வேலைகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் துணுக்காய் பிரதேச செயலகமானது மாநாட்டு மண்டபத்தை நிர்மாணித்தல் மற்றும் வைத்தியசாலையை புதுப்பித்தல் என்பவற்றிற்கான இரண்டு ஒப்பந்தங்களை பிரதேச செயலகத்தின் பதவியணியினர் நலன்புரிக்காக ஸ்தாபிக்கப்பட்ட சங்கத்திற்கு வழங்கியிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தங்களிற்குரிய 04 கதவுகளை பொருத்துதல் மற்றும் சுவர் மேற்பூச்சு வேலைகளிற்காக கூட்டுமொத்தம் ரூபா 194,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் வேலைகள் நாளதுவரை ஒப்பந்ததாரரால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்குறிப்பிட்ட மாநாட்டு மண்டபம் குறிப்பிட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் 01 ஆண்டிற்கு மேலாக விளைவற்றிருந்தது.

(ஈ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்

---

02 செயலகங்கள், 23 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 15 திணைக்களங்களால் முறையே ரூபா 13 மில்லியன், ரூபா 2,132 மில்லியன் மற்றும் ரூபா 19 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 2,164 மில்லியன் மொத்த நிதியேற்பாடு பல்வேறு செயற்பாடுகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்நிதியேற்பாட்டில் ரூபா 1,729 மில்லியன் தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 4.35 மில்லியன் தொகை அல்லது மொத்த நிதியேற்பாடுகளில் 20 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிதிகளிலிருந்து ரூபா 24.9 மில்லியன் மொத்தக் கிரயத்தில் செல்வபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2014 ம் ஆண்டில் மாவட்ட செயலாளருக்கு கையளிக்கப்பட்ட பாதுகாப்பு அற்ற மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட சிறுவர்களிற்கான பாதுகாப்பு நிலையம் ஒன்று 03 ஆண்டுகளுக்கு மேலாக பயனற்று இருந்தது.

**2.7 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 26701 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 18.00 | 12.96 | 11.00 | 14.39 | 54.00 | 41.98 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மற்றும் விலகிய 04 உத்தியோகத்தர்களிடமிருந்து பெற வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 507,310 நிலுவையாகவுள்ள பதவியணியினர் கடன் மீதிகள் 05 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன. எனினும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 பொது வைப்புக் கணக்கு**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தம் ரூபா 1.35 மில்லியன் பெறுமதியான 78 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராது 02 ஆண்டுகளிற்கு மேலாக பொது வைப்புக் கணக்கு மீதிகளில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

**2.9 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படல்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது 03 பதிவேடுகள் பேணப்பட்டிருக்காத அதே நேரம் 02 பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதிவேட்டின் வகை | பொருத்தமான பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| நட்டங்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| அலுவலக தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 854(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| விடுமுறைப் | இலங்கை சனநாயக சோசலிச | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

| | |
|---|---|
| பதிவேடு | குடியரசின் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு |

**2.10 இணங்காமைகள்**

---------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களின் 07 வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டத்தின் அளவு மற்றும் காரணங்களை மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் விசாரணைச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 மனித வளங்கள் முகாமைத்துவம்**

----------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

---------------------------------------------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் எண்ணிக்கை விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஊழியர் வகை | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 26 | 23 | 03 |
| மூன்றாம் மட்டம் | 13 | 02 | 11 |
| இரண்டாம் மட்டம் | 362 | 195 | 167 |
| ஆரம்ப மட்டம் | 48 | 40 | 08 |
| **மொத்தம்** | **449** | **260** | **189** |